தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மாநிலத்தில் உணவுப்பொருள் உற்பத்தியை 30 லட்சம் டன் கூடுதலாக அதிகரிக்க லேசர் தொழில்நுட்பம்**

First Published : 04 Aug 2011 12:05:26 PM IST

மேலூர், ஆக. 3: லேசர் முறையில் மாநிலத்தில் உணவுப் பொருள் உற்பத்தியை 85 லட்சம் டன்னிலிருந்து 115 லட்சம் டன்னாக உயர்த்த, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளதாக, அதன் துணைவேந்தர் ப. முருகேசபூபதி தெரிவித்தார்.

வேளாண். சுயதொழில் முனைவோர் ஆலோசனை மற்றும் கலந்துரையாடல் கூட்டம், மதுரை வேளாண்மைக் கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட துணைவேந்தர் பேசியதாவது:

தொழில்நுட்பத்தை மையமாக வைத்து உற்பத்தியைப் பெருக்குவது என்ற திட்டத்தின் அடிப்படையில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. விவசாயிகளே தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு விலையை நிர்ணயிக்கும் பயிற்சித் திட்டம் பல்கலை.யில் 2007-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

விவசாயி ஒருவர் ஓர் ஆண்டில் ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பில் குறைந்தபட்சம் ரூ. 1 லட்சம் வருமானம் ஈட்டச் செய்ய வேண்டும் என்பது இலக்கு.

இதற்காக கால்வாய்ப் பாசன நிலங்களுக்கும், மானாவாரி நிலங்களுக்கும், நீர்ப்பிடிப்பு நிலங்களுக்கும் என தனித்தனி ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது.

தமிழகத்தில், தற்போது 65 லட்சம் டன் அரிசியும், 20 லட்சம் டன் பயறுவகை மற்றும் சிறுதானியங்களும் ஆக 85 லட்சம் டன் உணவுப் பொருள்கள் உற்பத்தியாகின்றன. இதை 115 லட்சம் டன்னாக உயர்த்த, அரசு ஆலோசனை கேட்டது.

அதற்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் லேசர் முறையைப் பரிந்துரைத்துள்ளது.

தற்போது 63 வகையான லேசர் முறை நடைமுறையில்
உள்ளது.

இதனால், உதாரணமாக 8 மணி நேரம் தண்ணீர் பாயும் நிலத்தில் 4 மணி நேரத்தில் விரைவாக தண்ணீரை பாய்ச்ச முடியும். லேசர் முறையில் ஒரு ஏக்கருக்கு ஒரு டன் கூடுதல் உற்பத்தி பெறமுடியும்.

இந்த ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகக் கல்லூரிகளில், ஆராய்ச்சி நிலையங்களிலும் முழுமையாக லேசர் முறை நடைமுறைப்படுத்தப்படும். ஒவ்வொரு

வட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுகுறித்த பயிற்சி அளிக்கப்படும் என்றார் துணைவேந்தர் முருகேசபூபதி.

**வரி விதிப்பு இல்லா உபரி பட்ஜெட்**

First Published : 05 Aug 2011 03:29:26 AM IST



சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கையை வியாழக்கிழமை தாக்கல் செய்ய தயாராகிறார் நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம். உடன், முதல்வர் ஜெயலலிதா.

சென்னை, ஆக. 4: வரிவிதிப்பு ஏதும் இல்லாத உபரி பட்ஜெட்டை நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தமிழக சட்டப்பேரவையில் வியாழக்கிழமை தாக்கல் செய்தார்.

திமுகவினர் இந்த பட்ஜெட் தாக்கலைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்தனர்.

அக்டோபர் மாதம் உள்ளாட்சித் தேர்தல், எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் பிளஸ் டூ படிக்கும் மாணவ, மாணவியருக்கு ரொக்கமாக ஊக்கத் தொகை, எம்.எல்.ஏ.க்கள் தொகுதி வளர்ச்சி நிதி அதிகரிப்பு, அரசு கேபிள் டி.வி. செயலாக்கம், பஸ் நிலையங்களில் தனியார் ஒத்துழைப்புடன் வணிக வளாகங்கள் கட்டுதல் உள்ளிட்ட அறிவிப்புகள் இதில் வெளியாகியுள்ளன.

மாநில அரசுக்கான 2011-12-ம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்டத்தை பன்னீர்செல்வம் சமர்ப்பித்தார். ரூ.8,900 கோடிக்கு புதிய திட்டங்களையும், வளர்ச்சிக்கான திட்டங்களையும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, நடப்பு நிதி ஆண்டுக்கான திருத்திய வரவு செலவுத் திட்டத்தை அதிமுக அரசு இப்போது சமர்ப்பித்துள்ளது.

தேர்தல் அறிக்கையில் அறிவித்த திட்டங்களைச் செயல்படுத்துவது, அவற்றுக்கான நிதி ஒதுக்கீடு ஆகிய தகவல்கள் இந்த பட்ஜெட் உரையில் இடம் பெற்றுள்ளன.

புதிதாக வரி விதிப்பு பற்றியோ, வரி விலக்கு அளிப்பது பற்றியோ எந்த அறிவிப்பும் இந்த உரையில் இடம் பெறவில்லை.

நடப்பு நிதியாண்டில் ரூ.173.87 கோடி உபரி வருவாய் வரும் எனவும், நிதிப் பற்றாக்குறை ரூ.16,881 கோடியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூலதனத் திட்டங்களுக்கான நிதி ரூ.15,877.58 கோடியாக ஒதுக்கப்படுகிறது. நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்ய நடப்பு நிதியாண்டில் பெறப்படும் நிகரக் கடன் ரூ.17,261 கோடியாக இருக்கும். எனவே ஆண்டின் இறுதியில் அரசுக்கு மொத்தக் கடன் ரூ.1,18,610 கோடியாக இருக்கும்.

**முக்கிய அறிவிப்புகள்**

* மாணவ, மாணவியர் பள்ளிகளில் இடைநிற்றலைக் குறைக்க 10, 11-ம் வகுப்பு படிப்போருக்கு ரூ.1500, 12-ம் வகுப்பு படிப்போருக்கு ரூ.2000 உதவித் தொகை வழங்கப்படும்.
* அடுத்த கல்வி ஆண்டில் இருந்து பள்ளிக் குழந்தைகளுக்கு 4 செட் சீருடைகள் வழங்கப்படும். 6-ம் வகுப்பும் அதற்கு மேலும் பயிலும் மாணவர்களுக்கு அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டையும், மாணவியருக்கு பாவாடை, தாவணிக்குப் பதிலாக சல்வார் கமீசும் வழங்கப்படும்.
* அரசு கேபிள் டி.வி. நிறுவனத்துக்கு ஏற்கெனவே 4 நகரங்களில் உள்ள தலைமுனையங்கள் மறுபடி செயல்படத் தொடங்குவதுடன், மேலும் 16 மாவட்டங்களில் இந்த நிறுவனம் சார்பில் தலைமுனையங்கள் தொடங்கப்படும். இதுதவிர 11 மாவட்டங்களில் தனியார் தலைமுனையங்களுடன் ஒப்பந்தம் செய்து, ஒளிபரப்பு வசதிக்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
* எம்.எல்.ஏ.க்களின் தொகுதி வளர்ச்சி நிதி ரூ.2 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.
* அடுத்த 5 ஆண்டுகளில் விவசாயிகளின் தனிநபர் வருமானத்தை இரண்டு அல்லது மூன்று மடங்கு உயர்த்த திட்டங்கள் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் உணவு உற்பத்தி 115 லட்சம் டன் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
* சென்னையில் புறநகர் காவல்துறை ஆணையரகம், சென்னை மாநகர காவல் ஆணையரகத்துடன் ஒருங்கிணைத்து சென்னை பெருநகர காவல் ஆணையரகமாக உருவாக்கப்படவுள்ளது.
* சென்னை நகருக்கு எதிர்கால குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய சென்னைக்கு அருகே புதிதாக 3 ஏரிகள் உருவாக்குவதுடன், மேலும் சில ஏரிகளை சீரமைத்து நகருக்கு குடிநீர் சப்ளையை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்படும்.
* ஆவின் மூலமாக 155 நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் தொடங்கப்பட்டு, 10 கி.மீ. சுற்றளவுக்கு கால்நடை மருத்துவ வசதி அளிக்கப்படும்.

பிளாஸ்டிக் கழிவில் சாலை அமைக்க ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* 104 அணைகள் ரூ.745 கோடியில் புனரமைக்கப்படும்.

மோட்டார் வாகனங்கள், உதிரி பாகங்கள் தயாரித்தல், உயிரி தொழில்நுட்பம், மருந்து துறை ஆகியவற்றுக்கென புதிய தொழில் கொள்கை 2011 உருவாக்கப்படும்.

* சிறு, குறு, நடுத்தர தொழிற்சாலைகளுக்கு மூன்று சதவீத வட்டி தள்ளுபடியில் கடன் வழங்கப்படும்.

மாநிலத்தில் புதிதாக 10 புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படும்.

* நிலங்களை ஒருங்கிணைத்து அனைவரும் பயன்களை பகிர்ந்து கொள்ளும் வகையில், புதிய நில எடுப்புக் கொள்கை உருவாக்கப்படும். திருக்கோயில் அன்னதானத் திட்டம் மேலும் 106 கோவில்களுக்கு விஸ்தரிக்கப்படுகிறது.

* திருச்சி அண்ணல் காந்தி அரசு மருத்துவமனை ரூ.100 கோடியில் சிறப்பு சிகிச்சை மையமாக ஆக்கப்படும்.

கிராமப்புற இளம்பெண்களுக்கு இலவசமாக சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்படும்.

* விற்பனை வரி நிலுவை, பத்திரப் பதிவுக் கட்டண நிலுவையை வசூலிக்க ""சமாதான் திட்டங்கள்" தொடங்கப்படும். 2012 மார்ச் வரை இத் திட்டம் இருக்கும்.

* வணிகர் நல வாரிய உறுப்பினராக ஆண்டுதோறும் வணிகர்கள் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூ.500 செலுத்தி ஆயுள்கால உறுப்பினராக பதிவு செய்து கொள்ளலாம். மதிப்புகூட்டு வரியில் விலக்கு அளிக்கப்பட்ட சிறு குறு வணிகர்களையும் வாரியத்தில் சேர்க்க அரசு ஆணையிட்டுள்ளது.

* மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு கிடைப்பதை உறுதி செய்ய தலைமைச் செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்படும்.

* முதல்வரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை இருந்தால் ரூ.50 ஆயிரமும், இரு பெண் குழந்தைகளாக இருந்தால் தலா ரூ.25 ஆயிரமும் வைப்புத் தொகை வழங்கப்படும்.

* போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதல் வருவாய் ஏற்படுத்த, தற்போது கணிசமாக நிலம் உள்ள பேருந்து நிலையங்களை, அரசு - தனியார் கூட்டு முயற்சியால் பேருந்து நிறுத்த வசதியுடன் அடுக்கக வணிக வளாகம் கட்டி மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

* நடப்பாண்டில் புதிதாக 3,000 பேருந்துகள் வாங்கப்படும்.

இலவச மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவையும், இலவச கறவை மாடு மற்றும் ஆடுகள் வழங்குவதும் செப்டம்பர் 15-ல் தொடங்கும்.

* உலமாக்கள் ஓய்வூதியம் ரூ.1000 ஆக உயர்த்தப்படுகிறது.

**மண்புழு உரம் தயாரிப்பில் புதிய யுத்தி!**

First Published : 04 Aug 2011 01:51:38 PM IST

தருமபுரி, ஆக. 3: மண்புழு உரம் தயாரிக்கும் முறையில் புதிய யுத்தி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்புதிய முறையில் சிமென்ட் தொட்டிகளுக்கு பதிலாக "வெர்மி பேக்' (மண்புழு உரப்பை) தொட்டியாக பயன்படுத்தி உரம் தயாரிக்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் இந்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

தாவர மற்றும் விலங்குகளின் கழிவுகளை 'எபிஜெஸ்' புழுக்களின் உதவியுடன் மக்க வைத்து மண்புழு உரம் தயாரிக்கப்படுகிறது. மண்புழுக்களுக்கு உகந்த கழிவுகளான பண்ணைக் கழிவுகள், காய்கறிக் கழிவுகள், இலைச்சருகுகள், விலங்கு கழிவுகள் மற்றும் வேளாண் சார்ந்த கழிவுகளையும் பயன்படுத்தலாம்.

மண்புழு உரத்தில் சுமார் 15 சதவீதம் தழைச்சத்தும், 0.5 சதவீதம் மணிச்சத்தும், 0.8 சதவீதம் சாம்பல் சத்தும், 10 முதல் 12 சதவீதம் வரை கரிமப் பொருள்களும் உள்ளன.

ஒரு ஹெக்டேருக்கு 5 டன் மண்புழு உரம் இட வேண்டும். இதில் 75 கிலோ தழைச்சத்தும், 25 கிலோ மணிச்சத்தும், 45 கிலோ சாம்பல் சத்தும் இருக்கும். இவை சுமார் 160 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 60 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்துக்கு இணையானது. மண்புழு உரத் தொழில்நுட்பத்தை சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்களது பண்ணைகளிலேயே தயாரிக்கலாம். உர உற்பத்திக்கு தனியாக தொட்டிகள் (செங்கல், சிமெண்ட் பயன்படுத்தி) அமைக்கப்படுவதற்கு பதிலாக பெரிய அளவிலான மண்புழு உரப்பைகளை தொட்டிகளாக மாற்றியும் மண்புழு உரம் உற்பத்தி செய்யலாம்.

இந்த முறையில் தொட்டிகள் அமைப்பதற்கான செலவு சற்று குறையும். கையாளுவது எளிதானது.

இது குறித்த பயிற்சி வகுப்பு முதல்கட்டமாக வேளாண் மற்றும் தோட்டக்கலை அதிகாரிகளுக்கு ஜூலை 27 முதல் 29-ம் தேதி வரை நடைபெற்றது. வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் நா. தமிழ்ச்செல்வன் மற்றும் பேராசிரியர்கள் இப்பயிற்சியை அளித்தனர். இந்தப் பயிற்சியை பெற விரும்பும் விவசாயிகள் வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகலாம்.

**மானாவாரி மணிலா பயிரை காக்க...**

First Published : 04 Aug 2011 12:22:16 PM IST

வேலூர்: வேலூர் மாவட்டத்தில் மானாவாரி மணிலா பயிரிட்டுள்ளவர்கள் மேலுரமாக ஜிப்சம் இட்டு மகசூலை அதிகரிக்கலாம் என அணைக்கட்டு வேளாண்மை உதவி இயக்குநர் ஜி. ராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

அணைக்கட்டு உள்ளிட்ட பகுதிகளில் விதைக்கப்பட்டுள்ள மானாவாரி மணிலா பயிர் இப்போது பூ பூக்கும் நிலையை எட்டியுள்ளது. இந்நிலையில் காய்கள் முதிர்ச்சி அடையும் பருவம் வரை சுண்ணாம்புச் சத்து 90 சதவீதத்துக்கும் அதிகமாகத் தேவை. இதனால் மணிலாவுக்கு ஜிப்சம் மேலுரமாக இடுவது அவசியம்.

சுண்ணாம்பு சத்தை மணிலா செடிகள் வேர் மூலம் மண்ணில் இருந்து உறிஞ்சி, இலை திசுக்களில் நிலை நிறுத்திக் கொள்கிறது. பின்னர் வளரும் காய்களுக்கு சத்தை விழுது மூலம் இறங்கிச் செல்வதைத் தடுத்து விடுவதும் ஆராய்ச்சி முடிவுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது.

மணிலாவில், சுண்ணாம்புச் சத்து தேவையை பூர்த்தி செய்தால் மட்டுமே, பொக்கு காய்கள் குறைந்து, திரட்சியுடன் கூடிய முதிர்ந்த காய்கள் கிடைக்கும்.

எப்படி இட வேண்டும்

மணிலா பயிரில், பூ பூத்த நிலையில் இருந்து அதற்கு தேவையான சுண்ணாம்புச் சத்தை மண்ணில் இட்டு ஈடுசெய்ய வேண்டும். இதற்கு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சத்தை மேலுரமாக இட வேண்டும்.

மணிலா விதைப்பு செய்த 6 முதல் 9 வார காலத்துக்குள் மண்ணில் போதிய ஈரப்பதம் உள்ள நேரங்களில் இட்டு, மண்ணை கைக் களை மூலம் 3 செ.மீட்டர் ஆழத்துக்கு நன்கு கிளறி விட வேண்டும்.

மண்ணில் நேரடியாக இடுவதற்கு பதிலாக, நன்கு பொடி செய்த ஜிப்சத்தை துணியின் மூலம், கைகளால் செடிகளைச் சுற்றி தூவி, மண்ணை கிளறி விடுவதால் மட்டுமே, ஒரு ஏக்கரில் 100 முதல் 200 கிலோ அளவுக்கு கூடுதல் மகசூல் கிடைக்கும்.

கூடுதல் நன்மை தரும் கந்தகச் சத்து வேலூர் மாவட்டத்தில் உள்ள மானாவாரி நிலங்களில் தொடர்ந்து மணிலா பயிரிடப்பட்டு வருவதால், மண்ணில் உள்ள கந்தகச் சத்து அளவு குறைந்து வருகிறது. இதனால் கூட மணிலா பயிரில் மகசூல் குறையும் வாய்ப்பு உள்ளது.

ஜிப்சம் மேலுரமாக இடுவதால், இதில் உள்ள கந்தகச் சத்து மணிலாவுக்கு கிடைத்து மகசூல் அதிகரித்துள்ளதும் ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது.

மானியத்தில் ஜிப்சம்

அணைக்கட்டு வட்டாரத்தில் அணைக்கட்டு, பள்ளிகொண்டா, ஒடுகத்தூர் ஆகிய வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானிய விலையில் இப்போது ஜிப்சம் விற்பனை செய்யப்படுகிறது. மானியச் சலுகை அனைத்து விவசாயிகளுக்கும் உண்டு என்றார் ராமகிருஷ்ணன்.

**சொட்டுநீர்ப் பாசனத்துக்கு 4% வட்டியில் வங்கிக் கடன்**

First Published : 04 Aug 2011 01:49:17 PM IST

ராசிபுரம், ஆக. 3: சொட்டுநீர்ப் பாசனத்துக்கு 4 சதவீத வட்டியில் வழங்கப்படும் கடனுதவியைப் பயன்படுத்திக் கொள்ள விவசாயிகளுக்கு பாரத ஸ்டேட் வங்கி மண்டல மேலாளர் எஸ்.வி. நாராயணன் அழைப்பு விடுத்துள்ளார்.

ராசிபுரம் பாரத ஸ்டேட் வங்கி சார்பில், ஜவ்வரிசி உற்பத்தியாளர்களுடன் சந்திப்புக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்தில் அவர் பேசியது:

கரும்பு உற்பத்தி அதிகமுள்ள மோகனூர் பகுதியில் கரும்பு வயலுக்கு சொட்டு நீர்ப் பாசனம் மிகவும் உதவியாக உள்ளது. சொட்டுநீர்ப் பாசனத்துக்காக 4 சதவீத வட்டியில் கடன் வழங்கப்படும். விவசாயிகளுக்கான நகைக் கடனும் 4 சதவீத வட்டியில் வழங்கப்படுகிறது.

நாமக்கல், திருப்பூர் மாவட்டங்களைத் தொழில் மாவட்டமாக கருதி நூற்பாலைகள், நிட்டிங், கோழிப்பண்ணை, போக்குவரத்துத்தொழில், ஜவ்வரிசி தொழிற்சாலை, விசைத்தறி உள்ளிட்ட தொழில்களுக்கு சுமார் 3 ஆயிரம் கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கடனுதவிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

இதற்காக திறந்த வெளி தவணைக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில், எந்தத் தொழிலுக்குத் தேவையான உபகரணங்களையும் வாங்கலாம்.

இன்சூரன்ஸ்: வீட்டு வசதி கடன் திட்டத்தில் வீடு கட்டுவதற்கு கடன் வழங்கும் போது குறிப்பிட்ட தொகை "குரூப்' சுதன் என்ற இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் பிடித்தம் செய்யப்படும். வீடு கட்டி முடித்தப் பிறகு குடும்பத் தலைவர் மரணம் அடைய நேரிட்டால் அதன் பிறகு கடனை திரும்ப செலுத்தத் தேவையில்லை. எஸ்பிஐ லைப் இன்சூரன்ஸ் மூலம் கடன் தொகை செலுத்தப்படும்.

பாரத ஸ்டேட் வங்கிக்கு இந்தியா முழுவதும் 25 ஆயிரம் ஏடிஎம் மையங்கள் உள்ளன. மேலும், 25 ஆயிரம் ஏடிஎம் மையங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.மல்லசமுத்திரம், புத்தூர் கிழக்கு (வேலகவுண்டம்பட்டி) ஆகிய இடங்களில் வங்கி கிளைகள் விரைவில் தொடங்கப்படும். சேகோ தொழில் உரிமையாளர்கள் கோரிக்கையை ஏற்று

ராசிபுரம் வங்கியில் தனிப் பிரிவு ஏற்படுத்தப்படும் என்றார்.

வங்கி முதன்மை மேலாளர் வி.எஸ்.வேணுகோபால், ராசிபுரம் தாலுகா ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் டி.ஆர்.மணிசேகரன், செயலாளர் மோகனசுந்தரம் மற்றும் சேகோ உற்பத்தியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**நாமக்கல் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்!**

First Published : 04 Aug 2011 01:48:14 PM IST

நாமக்கல், ஆக. 3: நாமக்கல் மாவட்டத்தில் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் விரைவில் திறக்கப்படும் என வேளாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் உறுதியளித்தார்.

நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் கொங்குவேளாளர் மண்டபத்தில் திருத்திய நெல் சாகுபடி குறித்த கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக் கருத்தரங்கில் கே.ஏ. செங்கோட்டையன் பேசியது:

இப்போதைய சூழலில் வேளாண்மையில் பல்வேறு இடர்பாடுகளை விவசாயிகள் சந்திக்க வேண்டியுள்ளது. வறட்சி, இயற்கை இடர்பாடு ஆகியவை வேளாண்மையைப் பாதிக்கும் முக்கியக் காரணிகளாக உள்ளன.

விவசாயக் கூலிகளுக்கான ஆள்பற்றாக்குறையைப் போக்க இயந்திரங்களின் பயன்பாடு அதிகரிக்கப்பட்டு வருகிறது. திருத்திய நெல் சாகுபடி முறையில் ஒரு நாளைக்கு 10 ஏக்கர் அளவில் நெல் நடவு செய்யலாம். கூடுதல் மகசூலும் பெற முடியும். ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விளைபொருள்களை சேமித்து வைத்து, நல்ல விலை கிடைக்கும்போது அவற்றை விற்பனை செய்தால் கூடுதல் லாபம் பெறலாம். நாமக்கல் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

வருவாய்த்துறை அமைச்சர் பி.தங்கமணி: மேட்டூர் அணையிலிருந்து இடதுகரை, வலதுகரை கால்வாய்களில் பாசனத்துக்குô்க தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், குமாரபாளையம் பகுதி விவசாயிகள் பயன்பெறுவர். 11,768 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும். 137 நாள்கள் வரை திறந்துவிடப்படும் தண்ணீரை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்திக் கொண்டு வேளாண் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றார்.

சட்டப்பேரவை துணைத்தலைவர் ப.தனபால், வேளாண்மை ஆணையர் சந்தீப்சக்சேனா, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் கலியபெருமாள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**தருமபுரி மாவட்டத்தில் சாமை உற்பத்தியை அதிகரிக்க புதிய திட்டம்!**

First Published : 04 Aug 2011 01:52:30 PM IST

தருமபுரி, ஆக. 3: தருமபுரி மாவட்டத்தில் சாமை உற்பத்தியை அதிகரிக்க புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், தீவிர சிறுதானியங்கள் முன்னேற்ற ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டம் (இன்சிம்ப்) என்ற பெயரில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக தருமபுரி மாவட்டத்தில் சுமார் 8,000 ஏக்கர் பரப்பளவில் ரூ.64 லட்சம் மதிப்பில் சாமைப் பயிர் செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்படவுள்ளன.

பாரம்பரியமாக சாகுபடி செய்யப்பட்டு வந்த சிறுதானியப் பயிர்களான கேழ்வரகு, சாமை, தினை, வரகு, பனிவரகு, குதிரைவாலி ஆகிய பயிர்களின் சாகுபடி பரப்பு ஆண்டுதோறும் குறைந்துகொண்டே வருகிறது.

வறட்சி, பூச்சிநோய்த் தாக்குதலை தாங்கி குறைந்த காலத்தில் இப் பயிர்கள் வளர்ந்து மகசூல் தரும். முன்பு 70 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு வந்த சாமை பரப்பளவு கடந்த 5 ஆண்டுகளில் படிப்படியாக குறைந்து 43,500 ஏக்கரில் இப்போது சாகுபடி செய்யப்படுகிறது.

நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து சாமை உற்பத்தியைப் பெருக்குவதுதான் திட்டத்தின் முக்கிய நோக்கம். சாமையில் இருந்து மதிப்புக்கூட்டியப் பொருள்களைத் தயாரிக்கவும், சாமையில் இருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருள்களால் கிடைக்கும் ஊட்டச்சத்து குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது குறித்து, தருமபுரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கா.ராஜன் கூறியது:

மாவட்டத்தில் உள்ள 8 ஒன்றியங்களிலும் நடப்பாண்டு தலா 1,000 ஏக்கர் வீதம் செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்படும். உயிர் உரங்கள், நுண்ணூட்டச்சத்து தழை, மணி, சாம்பல் சத்துக்கள் ஏக்கருக்கு ரூ.800 என்ற அளவில் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.

சிறுதானியங்களில் சான்று விதை உற்பத்தி செய்யும் வகையில், 20 மெட்ரிக் டன் ராகி விதை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையாக கிலோவுக்கு ரூ.10 கூடுதலாக ரூ.2 லட்சம் வரை வழங்கப்படும்.

சாமை செயல்விளக்கத் திடல்கள் அமைக்க விரும்பும் விவசாயிகள் அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை நேரில் அணுகலாம் என்றார் அவர்.

**மாநிலத்தில் உணவுப்பொருள் உற்பத்தியை 30 லட்சம் டன் கூடுதலாக அதிகரிக்க லேசர் தொழில்நுட்பம்**

First Published : 04 Aug 2011 12:05:26 PM IST

மேலூர், ஆக. 3: லேசர் முறையில் மாநிலத்தில் உணவுப் பொருள் உற்பத்தியை 85 லட்சம் டன்னிலிருந்து 115 லட்சம் டன்னாக உயர்த்த, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளதாக, அதன் துணைவேந்தர் ப. முருகேசபூபதி தெரிவித்தார்.

வேளாண். சுயதொழில் முனைவோர் ஆலோசனை மற்றும் கலந்துரையாடல் கூட்டம், மதுரை வேளாண்மைக் கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட துணைவேந்தர் பேசியதாவது:

தொழில்நுட்பத்தை மையமாக வைத்து உற்பத்தியைப் பெருக்குவது என்ற திட்டத்தின் அடிப்படையில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. விவசாயிகளே தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு விலையை நிர்ணயிக்கும் பயிற்சித் திட்டம் பல்கலை.யில் 2007-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

விவசாயி ஒருவர் ஓர் ஆண்டில் ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பில் குறைந்தபட்சம் ரூ. 1 லட்சம் வருமானம் ஈட்டச் செய்ய வேண்டும் என்பது இலக்கு.

இதற்காக கால்வாய்ப் பாசன நிலங்களுக்கும், மானாவாரி நிலங்களுக்கும், நீர்ப்பிடிப்பு நிலங்களுக்கும் என தனித்தனி ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது.

தமிழகத்தில், தற்போது 65 லட்சம் டன் அரிசியும், 20 லட்சம் டன் பயறுவகை மற்றும் சிறுதானியங்களும் ஆக 85 லட்சம் டன் உணவுப் பொருள்கள் உற்பத்தியாகின்றன. இதை 115 லட்சம் டன்னாக உயர்த்த, அரசு ஆலோசனை கேட்டது.

அதற்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் லேசர் முறையைப் பரிந்துரைத்துள்ளது.

தற்போது 63 வகையான லேசர் முறை நடைமுறையில்
உள்ளது.

இதனால், உதாரணமாக 8 மணி நேரம் தண்ணீர் பாயும் நிலத்தில் 4 மணி நேரத்தில் விரைவாக தண்ணீரை பாய்ச்ச முடியும். லேசர் முறையில் ஒரு ஏக்கருக்கு ஒரு டன் கூடுதல் உற்பத்தி பெறமுடியும்.

இந்த ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகக் கல்லூரிகளில், ஆராய்ச்சி நிலையங்களிலும் முழுமையாக லேசர் முறை நடைமுறைப்படுத்தப்படும். ஒவ்வொரு வட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுகுறித்த பயிற்சி அளிக்கப்படும் என்றார் துணைவேந்தர் முருகேசபூபதி.

**"நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்'**

First Published : 04 Aug 2011 01:12:37 PM IST

திருவாரூர், ஆக. 3: வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, அதிக மகசூல் பெற விவசாயிகள் முயற்சிக்க வேண்டும் என்றார் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன்.

திருவாரூர் மாவட்ட வேளாண்துறை சார்பில், திருத்துறைப்பூண்டி வட்டம், இடும்பாவனத்தில் விவசாயிகளுக்கு நவீன வேளாண் கருவிகள், இடுபொருள்கள் மானிய விலையில் வழங்கும் விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விழாவுக்குத் தலைமை வகித்து ஆட்சியர் பேசியது:

குறைந்த இடத்திலேயே உற்பத்தியை அதிக அளவில் மேற்கொள்ள விவசாயிகள் நவீன வேளாண் கருவிகள், தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டியது அவசியம். எனவேதான், விவசாயிகள் பயன்பெறும் வகையில், மானிய விலையில் வேளாண் கருவிகள் மற்றும் இடுபொருள்களை அரசு வழங்கி வருகிறது.

இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி விவசாயிகள் அதிக அளவில் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்றார் ஆட்சியர்.

விழாவில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கே. உலகநாதன் (திருத்துறைப்பூண்டி), ஆர். காம்ராஜ் (நன்னிலம்), முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ம. கல்யாணசுந்தரம், ஒன்றியக்குழு உறுப்பினர் ஆர்.கே.பி. நடராஜன், நெல் உற்பத்தியாளர் சங்க மாவட்டப் பொருளர்


எஸ். ராசமாணிக்கம், வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகனன், துணை இயக்குநர்கள் ந. கபிலன், இளங்கோ உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

தினமலர்

**உணவுப் பொருள் பணவீக்கம் 8.04 சதவீதமாக உயர்வு**

ஆகஸ்ட் 05,2011,00:15




புதுடில்லி: நாட்டின் உணவுப்பொருள் பணவீக்கம், ஜூலை 23ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 8.04 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதற்கு முந்தைய வாரத்தில், இது, 7.33 சதவீதம் என்றளவில் குறைந்து காணப்பட்டது. கடந்த 2009ம் ஆண்டு, நவம்பர் மாதத்திற்கு பிறகு, உணவுப்பொருள் பணவீக்கம்,இந்தளவிற்கு குறைந்திருந்தது. ஆனால், அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை அதிகரித்ததையடுத்து, தற்போது மீண்டும் உணவுப் பொருள் பணவீக்கம் அதிகரித்துள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், வெங்காயம், பழங்கள், பால் உள்ளிட்ட பல பொருள்களின் விலை அதிகரித்திருந்தது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் உணவுப் பொருள் பணவீக்கத்தில், பல அத்தியாவசியப் பொருள்களின் விலை, 16.27 சதவீதம் என்றளவில் உயர்ந்துள்ளது.

வெங்காயத்தின் விலை, சென்றாண்டின் இதே வாரத்தை விட, 26.36 சதவீதம் என்றளவிலும், பழங்கள் விலை, 15.97 சதவீதம் என்றளவிலும், பால் விலை, 10.26 சதவீதம் என்றளவிலும் அதிகரித்திருந்தது. காய்கறிகளின் விலையும், ஆண்டுக்கணக்கில், 10.20 சதவீதம் உயர்ந்திருந்தது.இவை தவிர, தானியங்கள் (5.13 சதவீதம்), உருளைக்கிழங்கு (7.85 சதவீதம்),முட்டை, இறைச்சி (6.66 சதவீதம்)ஆகியவற்றின் விலையும் உயர்ந்திருந்தது.இருப்பினும், கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்

கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகள் விலை, 7 சதவீதத்திற்கும் அதிகமாக குறைந்திருந்தது. நூலிழை, எண்ணெய் வித்துக்கள், தாதுப் பொருள்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய உணவு சாராத பொருள்களின் விலை, 16.05 சதவீதத்திலிருந்து, 15.60 சதவீதமாக குறைந்திருந்தது. எரிபொருள்கள், மின்சாரம் ஆகியவற்றின் விலை, 12.12 சதவீதம் என்றளவில், கடந்தாண்டின் இதே வாரத்தில் இருந்த அளவிலேயே இருந்தது.மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், நாட்டின் பொது பணவீக்கம், சென்ற ஜூன் மாதத்தில், 9.44 சதவீதம் என்றளவில், மிகவும் அதிகரித்திருந்தது.

இதை கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை 0.50 சதவீதம் உயர்த்தியது. கடந்த 2010ம் ஆண்டு மார்ச் மாதம் முதல், இதுவரையிலுமாக ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை 11 முறை உயர்த்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு, அண்மையில் நாட்டின் பணவீக்கம், வரும் அக்டோபர் மாதம் வரையில், 9 சதவீதம் என்றளவில் உயர்ந்து காணப்படும் என்றும், நடப்பு நிதியாண்டின் இறுதியில் (2012ம் ஆண்டு மார்ச்), இது, 6.5 சதவீதமாக குறையக்கூடும் என்று அறிவித்திருந்தது.இந்நிலையில், நாட்டின் உணவுப் பணவீக்கம் மீண்டும் அதிகரித்துள்ளது. எனவே, ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை மீண்டும் உயர்த்தக் கூடும் என்ற அச்சப்பாடும், சந்தையில் நிலவுகிறது.

**வயல்வெளிகளில் ஆட்டு பட்டிகள் அமைப்பு :இயற்கை உரத்துக்கு மாறும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2011,00:43 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் ஆடிப்பட்ட சாகுபடி பணிக்காக விவசாயிகள் வயல்வெளிகளில் இயற்கை உரங்களை பயன்படுத்த ஆர்வம் காட்டி வருகின்றனர். வயல்வெளிகளில் கடந்த காலங்களை போல் ஆட்டு பட்டி அமைத்து இயற்கை உரங்களை பயன்படுத்த துவங்கியுள்ளனர். விவசாய நிலங்களில் அதிக அளவில் ரசாயன உரங்கள் மற்றும் மருந்துகள் அடிப்பதால், பூமியில் உள்ள நன்மை செய்யும் பூச்சிகள் அழிக்கப்பட்டு, மண் வளம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. மேலும் காற்று, நீர் ஆகியவை மாசு அடைகின்றன. இதனால், தாவரங்களில் நோய் எதிர்ப்பு திறனை இழந்து மரக்கன்றுகள் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. ரசாயன உரங்கள் பயன்படுத்தப்படும் உணவு தானியங்களிலும், காய்கறி உள்ளிட்ட பொருட்களிலும் மனித மெல்ல கொல்லும் நஞ்சுத்தன்மைகள் இருப்பதையும், தாய் பாலில் கூட நஞ்சு தன்மை இருப்பது பல ஆய்வுகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் பலரும் இயற்கை உரங்களுக்கு மாற துவங்கியிருப்பதோடு, பல ஊர்களில் இயற்கை உரங்களில் பயிர் செய்யப்பட்டு, அறுவடை செய்யப்பட்ட உணவு தானியங்கள், காய்கறிகள், பழங்கள் விற்பனை செய்யும் அங்காடிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்க துவங்கியுள்ளது. ரசாயன உரங்கள், பூச்சி

கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதால், மண்ணின் தன்மையும் கெட்டு போய் சுழ்றசி முறை விவசாயத்தில் அதிக மகசூல் கிடைப்பதும் பாதிக்கப்பட்டு வருகிறது. இயற்கை உரங்கள் தயாரிப்பு குறித்தும், இயற்கை உரங்களை பயன்படுத்துவது குறித்தும் விவசாயிகள் மத்தியில் வேளாண், தோட்டக்கலை துறை, வனத்துறை மூலம் விழிப்புணர்வு செய்யப்பட்டு வருகிறது. விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் அதிக அளவில் மானாவாரி மற்றும் இறவை பாசன மோட்டுப்பாங்கான நிலங்கள் அதிகம் உள்ளன.

குறிப்பாக பென்னாகரம், காரிமங்கலம், தர்மபுரி பகுதியில் மேட்டுப்பாங்கான நில அமைப்புகள் மானாவாரி நிலங்கள் அதிகம் உள்ளது. இந்த நிலங்களில் காடந்த காலங்களில் விவசாயிகள் தங்கள் வீடுகளில் வளர்க்கும் கால்நடை சாணங்கள், குப்பை கழிவுகள், வீடுகளில் பயன்படுத்தப்படும் விறகு அடுப்பு சாம்பல்கள் உள்ளிட்டவைகளை வீட்டின் புற வழிப்பகுதியில் தொட்டி அமைத்து சேகரித்து, வயல் வெளிகளில் இந்த சாண உரங்களை போட்டு நிலத்தை சீர் செய்து பயிர் செய்து வந்தனர். விவசாய வீடுகளில் குப்பை கழிவுகள் மற்றும் சாண கழிவுகள் அடங்கிய குப்பைகள் சேகரிப்பு குறைந்த நிலையில் விவசாயிகள் ரசாயன உரங்கள் பயன்பாடுத்துவதும் அதிகரித்தது.

தற்போது, ரசாயன உரங்களால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்பட்டதை தொடர்ந்து விவசாயிகள் இயற்கை உரங்கள் பயன்படுத்துவதில் அதிக அக்கரை காட்ட துவங்கியுள்ளனர். குப்பை கழிவுகள், சாண கழிவுகள் கிடைப்பது அரிதாக இருப்பதால், நிலங்களில் விவசாயிகள் ஆடு மற்றும் மாடுகள் பட்டி அமைத்து இயற்கை சாண உரங்களை வயல் வெளிகளில் பயன்படுத்தி வருகின்றனர். மாவட்டம் முழுவதும் ஆடிப்பட்ட சாகுபடி பணிகள் துவங்கிய நிலையில் பென்னாகரம், காரிமங்கலம், தர்மபுரி ஆகிய பகுதிகளில் உள்ள மானாவாரி நிலங்கள் இறவை பாசன பகுதிகளில் ஆட்டுப்பட்டிகள் அமைத்து விவசாயிகள் சாணங்கள் பெறுகின்றனர். தங்கள் தேவைக்கு ஏற்ப பட்டிகளை அமைத்து கொள்ளலாம். ஒரு ஆட்டுக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

மேய்ச்சல் நேரங்கள் போக இரவு, பகல் நேரங்களில் வயல் வெளிகளில் அமைக்கப்படும் பட்டிகளில் ஆடுகள் அடைக்கப்படுகிறது. அதே போல் மாட்டு பட்டி அமைப்பவர்கள் இரவு நேரங்களில் வயல் வெளிகளில் மாடுகளை நிறுத்தி விடுகின்றனர். காலையில் மாட்டு சாணங்கள் வயல் முழுவதும் பரவி இயற்கை உரங்கள் வயல்வெளிகளுக்கு கிடைக்கிறது.

**விவசாய சங்க மாநில மாநாடு தாராபுரத்தில் ஆக.20ல் துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2011,02:05 IST

ஈரோடு: தாராபுரத்தில் ஆகஸ்ட் 20ல், மாநில விவசாய சங்கத்தின் மாநில மாநாடு துவங்கி, மூன்று நாட்கள் நடக்கிறது.தமிழ் மாநில விவசாய சங்க மாநில பொது செயலாளர் முத்தரசு ஈரோட்டில் கூறியதாவது: தமிழ்நாடு விவசாய சங்க மாநில மாநாடு, தாராபுரத்தில் ஆகஸ்ட் 20ல் நடக்கிறது. 22ம் தேதி வரை தொடர்ந்து மூன்று நாட்கள் நடக்கிறது. கம்யூனிஸ்ட் மாநில தலைவர் தா.பாண்டியன், தேசியக்குழு உறுப்பினர் நல்லகண்ணு, தஞ்சை பல்கலை பேராசிரியர் ராமநாதன், எம்.பி., சுப்பராயன், அகில இந்திய பொது செயலாளர் நாகேந்திரநாத் ஓஷா, தேசிய துணை தலைவர் ராமமூர்த்தி உள்ளிட்ட பலர் மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

இந்தியா முழுவதும் 16 கோடி பேரும், தமிழகத்தில் சுமார் ஒரு கோடி பேரும் விவசாய தொழிலாளர்களாக உள்ளனர். ஆனால் விவசாய தொழிலாளர்களுக்கு என்று தனியாக ஒரு துறையோ, அமைச்சரோ இல்லை. விவசாய தொழிலாளருக்கு தனியாக துறை ஒதுக்க வேண்டும் என்ற முக்கிய தீர்மானம், மாநாட்டில் நிறைவேற்றப்படும். நில உச்ச வரம்பின் படி பெறப்பட்ட நிலங்களை மீட்டு, நிலமில்லாத ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும். பசுமை வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியை மேலும் உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் மாநாட்டில் வலியுறுத்தப்படும்.

மாநாட்டு பேரணி ஆகஸ்ட் 22ல் நடக்கிறது. இவ்வாறு அவர் கூறினார். மாநில செயலாளர் பெரியசாமி, மாவட்ட தலைவர் வெங்கடாசலம், செயலாளர் கண்ணன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**மஞ்சி உற்பத்தி நிறுத்தம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2011,01:25 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு பகுதிகளில் மழை தொடர்ந்து தூறல் மழையாக பெய்து வருவதால், தென்னை மஞ்சி மில்களில் வேலை நிறுத்தப்பட்டுள்ளது.கிணத்துக்கடவு பகுதியில் தென்னை மட்டையில் இருந்து மஞ்சியை பிரித்து எடுக்கும் மில்கள் அதிகளவில் துவங்கப்பட்டுள்ளன. தாமரைக்குளம், தேவணாம்பாளையம் போன்ற பகுதிகளில் தென்னை மஞ்சியில் இருந்து கயிறு திரிக்கும் தொழிலும் நடந்து வருகிறது.தற்போது, மழை தொடர்ந்து தூறல் மழையாக பெய்து வருவதால், தென்னை மஞ்சியில் இருந்து பிரித்தெடுக்கும் மஞ்சியை உலர வைக்க முடியாமல் மலைபோல் குவித்து வைத்துள்ளனர். இதனால், மஞ்சி மில்களில் மஞ்சி

உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. உற்பத்தி இல்லாததால், கூலித்தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**வெல்லம் தயாரிப்பு தீவிரம்: 60 கி@லா ரூ.2,400**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2011,00:59 IST

உடுமலை : உடுமலை அருகே மறையூரில், கரும்பு வெட்டும் பணிகள் மற்றும் வெல்லம் தயாரிப்பு பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். 60 கிலோ வெல்லம் 2,400 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.உடுமலையிலிருந்து மூணாறு செல்லும் ரோட்டில் அமைந்துள்ளது மறையூர் கிராமம். இப்பகுதியில் வசிக்கும் மக்களின் பிரதானத் தொழிலாக விவசாயம் உள்ளது. அதில், மறையூர், கோவில்கடவு, ஆணைக்கல்பட்டி, நாச்சிவயல், மார்ச்சி வயல், கரசு நாடு, கூடவயல், பட்டம் காலனி உள்ளிட்ட பகுதிகளில், 2,000 ஏக்கருக்கு மேல் கரும்பு பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மலைப்பிரதேசத்தில், காய்கறிகளுக்கு இணையாக பத்து மாத பயிரான கரும்பு சாகுபடியில் அதிகளவு விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.அறுவடை செய்யும் கரும்புகளை தோட்டத்துச்சாலையில், ஆலை அமைத்து வெல்லம் தயாரித்து விற்பனை செய்ய விவசாயிகள் முனைப்பு காட்டி வருகின்றனர். "மறையூர் வெல்லம்' என்ற பெயரில் உள்ளூர் சந்தை மட்டுமின்றி, கேரளா மாநிலம் எர்ணாகுளம், கோட்டயம் பகுதிகளுக்கு அதிகளவு அனுப்பப்படுகிறது.

கேரளா மாநிலத்தில், மறையூர் வெல்லத்திற்கு "மவுசு' உள்ளதால், விவசாயிகளும் அதிகளவு வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.தற்போது, இப்பகுதியில், சாகுபடி செய்யப்பட்ட கரும்பு அறுவடைப்பணிகள், வெல்லம் தயாரிப்பு பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.இப்பகுதி விவசாயிகள் கூறியதாவது:
மறையூரில் காய்கறிகளுக்கு அடுத்தபடியாக, கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறுவடை செய்யப்படும் கரும்புகள் வெட்டப்பட்டு, கிரஷர் மூலமாக அரைத்து கரும்புச்சாறு தயாரிக்கப்படுகிறது. பின் கரும்புச்சாறு பெரிய கொப்பரையில் இட்டு, நன்றாக காய்ச்சப்படுகிறது. பின்னர் பதமான கரும்புச் சாறு உருண்டையாக பிடிக்கப்பட்டு, வெல்லம் தயாரிக்கப்படுகிறது. இப்பணியில், உடுமலை அருகே ஜல்லிபட்டி ஓனாக்கல்லூர் பகுதி தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். ரசாயனப் பொருட்கள் அதிகம் கலக்காமல், வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது, 60 கிலோ மூட்டை 2 ஆயிரத்து 400 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது,' என்றனர்.களமிறங்கும் மகளிர் சுய உதவிக்குழு: மறையூரில் "மறையூர் வெல்லம்' என்ற பெயரில் அதிகளவு விற்பனை செய்யப்படுகிறது. போதிய லாபம் கிடைப்பதால்,

விவசாயிகளும் கரும்பு சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், கரும்பு சாகுபடி பணியில், மகளிர் சுய உதவிக்குழுவைச் சேர்ந்த பெண்கள் ஆர்வம் காட்டத்துவங்கியுள்ளனர்.

**பயிர்களுக்கு மானியம் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2011,00:48 IST

பொங்கலூர் : தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் மானியம் பெற, பொங்கலூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சித்ராதேவி அழைப்பு விடுத்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் நடப்பு 2011-12ம் நிதியாண்டில் மானியமாக 21 லட்சம் ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் புதிதாக நெல்லி நடவு செய்யும் விவசாயிகளுக்கு எக்டருக்கு 10,500 ரூபாய் மதிப்பிலான நெல்லி ஒட்டுச்செடிகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன.தென்னையில் ஊடுபயிராக கோகோ நடவு செய்யும் விவசாயிகளுக்கு 12,000 ரூபாய் மதிப்பிலான கோகோ செடி, இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன.

வாழை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 16,800 ரூபாய் மதிப்பிலான இடுபொருட்களும், திசுவாழை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு எக்டருக்கு 31,200 ரூபாய் மதிப்பிலான திசு வாழைக்கன்றுகளும் வழங்கப்படுகின்றன.அனைத்து தோட்டக்கலை பயிர்களுக்கும் சொட்டு நீர் பாசனம் அமைத்து பயன்படுத்தும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு 75 சதவீதம், இதர விவசாயிகளுக்கு 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மூலம் பயனடைய விரும்பும் விவசாயிகள், பொங்கலூர் வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை அணுகலாம், என்று தெரிவித்துள்ளார்.

**10 டன் காய்கறி வரத்து குறைந்தது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2011,00:46 IST

திருப்பூர் : திருப்பூர் தெற்கு உழவர் சந்தைக்கு நேற்று 10 டன் வரை காய்கறி வரத்து குறைந்தது; என்றாலும் கூட, தட்டுப்பாடு ஏற்படாததால் காய்கறி விலை ஏற்றம் பெறவில்லை.அவினாசி, பல்லடம், பொங்கலூர் சுற்றுப்பகுதிகள், பெங்களூரு, மைசூரு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து திருப்பூர் தெற்கு உழவர் சந்தைக்கு காய்கறி கொண்டு வரப்படுகின்றன. நாளொன்றுக்கு சராசரியாக 800 விவசாயிகள், 65 டன் வரை சந்தைக்கு காய்கறி கொண்டு வருகின்றனர். 14

ஆயிரத்துக்கும் மேற்பட்ட நுகர்வோர் தேவைக்கேற்ப காய்கறி கொள்முதல் செய்வதற்காக சந்தைக்கு வருகின்றனர்.

இம்மாதத்தின் சிறப்பு தினமான ஆடிப்பெருக்கு நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. கோவில்களில் சிறப்பு வழிபாடு, ஆற்றோரங்களில் வழிபாடு நடத்துவதற்காக விவசாயிகள் பலரும் சென்று விட்டனர். இதனால், நேற்று சந்தைக்கு காய்கறி வரத்து 52 டன்னாக குறைந்தது.தெற்கு உழவர் சந்தை நிர்வாக அலுவலர் அறிவழகன் கூறியதாவது:
சந்தைக்கு வழக்கமாக 65 முதல் 70 டன் வரை காய்கறி வரத்து இருக்கும். நேற்று முன்தினம் ஆடிப் பெருக்கு தினம் என்பதால், பெரும்பாலான விவசாயி கள் வழிபாடுகளுக்காக சென்று விட்டனர்; குறைந்தளவு விவசாயிகளே காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். வழக்கத்தைவிட, சந்தையில் ஏழு முதல் 10 டன் வரை காய்கறி வரத்து குறைந்திருந்தது. தட்டுப்பாடு ஏற்படாததால், விலை ஏற்றம் இன்றி காணப்பட்டது, என்றார்.

**மானியத்தில் விவசாய கருவிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2011,00:37 IST

உடுமலை : உடுமலை கல்லாபுரத்தில் வேளாண்துறை சார்பில் விவசாயிகளுக்கு மானியத்தில் கருவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.உடுமலை வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் சார்பில், வேளாண்மை தொழில் நுட்ப முகமை திட்டத்தின் கீழ் கல்லாபுரம் பகுதியில் செம்மை நெல் சாகுபடி செயல்விளக்க திடல் அமைக்கப்பட்டுள்ளது. திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் மற்றும் களை எடுக்கும் கருவி கோனோவீடர் வழங்கப்பட்டது. வேளாண்மை துறை துணை இயக்குநர் சந்தானகிருஷ்ணன் கருவிகளைவழங்கினார். வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) திருமகள்ஜோதி, உதவி வேளாண் அலுவலர் வைரமுத்து மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**கறவை மாடு, செம்மறி ஆடு வழங்க ஆக., 8ல் சிறப்பு கிராமசபை கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2011,01:12 IST

அரியலூர்: அரியலூர் மாவட்டத்தில் கறவை மாடுகள், செம்மறி ஆடுகள் வழங்குவதற்கான சிறப்பு கிராம சபை கூட்டம் வரும் 8ம் தேதி நடக்கிறது. அரியலூர் மாவட்ட கலெக்டர் அனு ஜார்ஜ் விடுத்த அறிக்கை: தமிழகத்தில் பரம ஏழையாக உள்ள நிலமற்ற விவசாய கூலித்

தொழிலாளருக்கு, இலவச கறவை மாடு, வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு, அந்த மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என, தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இத்திட்டத்தை முன்னாள் முதல்வர் அண்ணாதுரை பிறந்த தினமான வரும் செப்டம்பர் 15ம் தேதி முதல்கட்டமாக செயல்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதையொட்டி அரியலூர் மாவட்டம், அரியலூர் பஞ்., யூனியனுக்குட்பட்ட இடையத்தாங்குடி, திருமானூர் பஞ்., யூனியனுக்குட்பட்ட அயன் சுத்தமல்லி, தா.பழூர் பஞ்., யூனியனுக்குட்பட்ட நடுவலூர் மற்றும் கார்குடி பஞ்சாயத்துகளில், வரும் 8ம் தேதி காலை 11 மணிக்கு சிறப்பு கிராமசபை கூட்டம் நடக்கவுள்ளது. கூட்டத்தில் கால்நடை உதவி டாக்டர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஆதிதிராவிடர் நலம்) ஆகியோர் பங்கேற்று, இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்புவோரிடம் இருந்து விண்ணப்பங்களை பெற உள்ளனர். அன்றைய தினம் நடக்கவுள்ள சிறப்பு கிராமசபை கூட்டங்களில் ஆங்காங்கு உள்ள ஏழை, எளிய மக்கள் கலந்து கொண்டு, பயன்பெறலாம்.

**உரங்களை கூடுதல் விலைக்கு விற்றால் விற்பனை உரிமம் ரத்துசெய்யப்படும்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2011,04:28 IST

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் உரங்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் உர விற்பனையாளர்களின் உர விற்பனை உரிமம் ரத்து செய்யப்படும் என வேளாண்மை இணை இயக்குனர் தேவசகாயம் எச்சரித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, கடையம், முக்கூடல், தென்காசி, செங்கோட்டை, மானூர் மற்றும் பாளை.வட்டாரங்களில் விவசாயிகள் கார் பருவ நெல்சாகுபடி செய்து வருகின்றனர். நெல்லை மாவட்டத்திற்கு நடப்பு கார் பருவத்திற்கு யூரியா 24 ஆயிரத்து 500 மெட்ரிக் டன், டிஏபி.,7 ஆயிரத்து 200, பொட்டாஷ் 10 ஆயிரம் மெட்ரிக் டன் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் 11 ஆயிரத்து 020 மெட்ரிக் டன் தேவை என தமிழக அரசிடம் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளன.நெல்லை மாவட்டத்திற்கு கடந்த ஜூன் மாதம் முடிய 15 ஆயிரத்து 900 மெட்ரிக் டன் யூரியா, 4 ஆயிரத்து 100 மெட்ரிக் டன் டிஏபி.,7 ஆயிரத்து 100 மெட்ரிக் டன், பொட்டாஷ் மற்றும் 6 ஆயிரத்து 670 மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் தேவை. ஆனால் உர நிறுவனங்கள் 9 ஆயிரத்து 600 மெட்ரிக் டன் யூரியா, ஆயிரத்து 936 மெட்ரிக் டன் டிஏபி.,2 ஆயிரத்து 107 மெட்ரிக் டன் பொட்டாஷ் மற்றும் 5 ஆயிரத்து 592 மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரங்களை மட்டுமே சப்ளை செய்துள்ளனர். மத்திய அரசு தமிழகத்திற்கு கடந்த ஜூலை மாதம் மிக மிக குறைந்த அளவு மட்டுமே பொட்டாஷ் உரங்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

அதனால் நெல்லை மாவட்டத்திற்கு ஜூலை மாதத்திற்கு தேவையான 3 ஆயிரத்து 100 மெட்ரிக் டன் பொட்டாஷ் உரங்களுக்கு உர நிறுவனங்கள் 555 மெட்ரிக் டன் மட்டுமே சப்ளை செய்துள்ளனர்.பொட்டாஷ் உரத்தட்டுப்பாட்டை பயன்படுத்தி மாவட்டத்தில் உள்ள உர விற்பனையாளர்கள் அதிக விலைக்கு விற்பனை செய்தால் உர விற்பனையாளர்களின் உர விற்பனை உரிமம் ரத்து செய்வதுடன் உரக்கட்டுப்பாடு சட்டத்தின்படி சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும்.பொட்டாஷ் உரங்களின் விற்பனை நேரடியாகவும், மறைமுகமாகவும் மாவட்ட வேளாண்துறை அலுவலர்களால் சிறப்பு ஆய்வுக்குழு அமைக்கப்பட்டு திடீர் ஆய்வு செய்தும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. உரங்களை அதிக விலைக்கு விற்பது குறித்து விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலத்தை தொடர்பு கொண்டு புகார் செய்யலாம்.ஒரு சில மொத்த விற்பனையாளர்கள், பொட்டாஷ் உரங்களை பதுக்கி வைத்து தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் அதிக விலைக்கும், சில்லறை விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்தால் அவர்களது மொத்த விற்பனை உரிமம் ரத்து செய்யப்படும்.இவ்வாறு தேவசகாயம் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**உணவு உற்பத்தியை பெருக்க இறவையில் நெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2011,22:43 IST

கம்பம்:இறவையில் கிணற்று பாசனத்தில் நெல் சாகுபடி செய்து, உணவு உற்பத்தியை அதிகரிக்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த விவசாயத்துறை முடிவு செய்துள்ளது. வரும் 2020 ல், தமிழகத்தில் உணவு பற்றாக்குறை ஏற்படும் என்று, பொருளாதார வல்லுனர்கள் எச்சரித்துள்ளனர். இதனால் உணவு உற்பத்தியை அதிகரிக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். தொடர்ந்து நெல் சாகுபடி செய்து வரும் கம்பம் பள்ளத்தாக்கில் மாற்றுப் பயிராக நிலக்கடலை மற்றும் சூரியகாந்தியை சாகுபடி செய்ய அதிகாரிகள் பரிந்துரை செய்துள்ளனர். ஒரு போகத்திற்கு நெல் சாகுபடியை தவிர்த்து, நிலக்கடலை, சூரியகாந்தி போன்ற எண்ணெய் வித்து பயிர்களை சாகுபடி செய்தால், நல்ல மகசூல் மற்றும் விலை கிடைக்கும் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர். மேலும் இறவையில் கிணற்று பாசனத்தில் தோட்டங்களில் நெல் சாகுபடி செய்ய விவசாயிகளை வலியுறுத்த திட்டமிட்டுள்ளனர். இதன்மூலம் நெல் சாகுபடி செய்த நிலங்களில் வேறு பயிர்களும், வேறு பயிர் சாகுபடி செய்த நிலங்களில் நெல் சாகுபடியும் செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும் என தெரிவித்துள்ளனர்.இதுபோல் பயிர்களை மாற்றி சாகுபடி செய்யவும் விவசாயிகளை வற்புறுத்த அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## சூரியசக்தி மின்சாரத்துடன் 300 சதுர அடியில் பசுமை வீடுகள் பட்ஜெட்டில் ரூ.1080 கோடி ஒதுக்கீடு

சென்னை, ஆக.5–

ஏழைகளுக்கு சூரியசக்தி மின்சாரத்துடன் கூடிய பசுமை வீடுகள் 300 சதுர அடி பரப்பளவில் கட்டித்தரப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து பட்ஜெட்டில் கூறப்பட்டிருப்பதாவது:–

300 சதுர அடியில் பசுமை வீடுகள்

கிராமப்புறங்களிலுள்ள வீடற்ற ஏழை, எளிய மக்களுக்கு, ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி அளவில், ரூ.1.80 லட்சத்தில், சூரிய ஒளி மூலம் மின்வசதி பெறும் 60,000 பசுமை வீடுகளை ரூ.1,080 கோடியில் இந்த அரசு 2011–2012 ஆம் ஆண்டில் கட்டித்தரும். இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ், தற்போது கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப்படும் உதவித் தொகையான ரூ.75,000, ரூபாய் ஒரு லட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதில் மத்திய அரசின் மானியப் பங்கு ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.33,750 ஆகும். மாநில அரசின் மானியப்பங்கு தற்போதுள்ள ரூ.41,250–க்கு பதிலாக ரூ.66,250 ஆக உயர்த்தி வழங்கப்படும். 2011–2012–ம் ஆண்டில் 1,00,553 வீடுகள் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தில் கட்டி தரப்படும்.

வறுமையிலிருந்து விடுபடும் வரை...

தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து வறுமை ஒழிப்பு திட்டங்களையும் ஒருங்கிணைத்து, வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள ஒவ்வொரு குடும்பமும் நேரடியாகப் பயன்பெறும் வகையில் வறுமை ஒழிப்பு திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். இதன் மூலம் அக்குடும்பங்களின் சமூக பொருளாதார முன்னேற்றங்கள் கண்காணிக்கப்பட்டு அவர்கள் வறுமையிலிருந்து விடுபடும் வரை அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்படும்.இவ்வாறு பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது.

## வெங்காயம், பழங்கள் விலை உயர்வால் உணவு பொருள் பணவீக்கம் 8.04 சதவீதமாக உயர்ந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

வெங்காயம், பழங்கள் மற்றும் பால் விலை உயர்வால், ஜூலை 23–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பொருள் பணவீக்கம் 8.04 சதவீதமாக உயர்ந்துள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இந்த பணவீக்கம் முந்தைய வாரத்தில் கடந்த 20 மாதங்களில் இல்லாத அளவிற்கு 7.33 சதவீதமாக குறைந்து இருந்தது.

உருளைக்கிழங்கு

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், வெங்காயம் விலை ஓராண்டு கால அடிப்படையில் 26.36 சதவீதம் உயர்ந்துள்ளது. உருளைக்கிழங்கு விலை 7.85 சதவீதமும், காய்கறி விலை 10.20 சதவீதமும் அதிகரித்துள்ளது. பழங்கள் விலை 15.97 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், பால் விலை 10.26 சதவீதம் உயர்ந்துள்ளது. தானியங்கள் விலை 5.13 சதவீதமும், முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 6.66 சதவீதமும் அதிகரித்துள்ளது.

அதேசமயம், பருப்பு வகைகள் விலை 7 சதவீதம் குறைந்துள்ளது. எண்ணெய் வித்துக்கள், கனிமங்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள் பணவீக்கம் 16.05 சதவீதத்திலிருந்து 15.60 சதவீதமாக குறைந்துள்ளது. எரிபொருள் பணவீக்கம் முந்தைய வாரத்தை போன்று 12.12 சதவீதமாக உள்ளது.

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 20 சதவீத பங்களிப்பை கொண்டுள்ள

*அத்தியாவசிய உணவு பொருள் பணவீக்கம் 10.49 சதவீதத்திலிருந்து 10.99 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடந்த ஜூன் மாதத்தில் பொது பணவீக்கம் 9.44 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதனை கட்டுப்படுத்தும் வகையில், பாரத ரிசர்வ் வங்கி, கடந்த 2010 மார்ச் மாதத்திலிருந்து இதுவரை முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை 11 முறை உயர்த்தி உள்ளது.*

*கண்டனம்*

*அத்தியாவசிய பொருள்கள் விலை உயர்ந்து வருவதற்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. அதேசமயம், பணவீக்கம் அதிகரித்து வருவதற்கு சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருவதும் ஒரு காரணம் என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.*

*கடந்த 2004–ஆம் ஆண்டு மே மாதத்தில் 36 டாலராக இருந்த ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை தற்போது சராசரியாக 107 டாலராக உயர்ந்துள்ளது என்று அவர் கூறினார்.*

## *முதல் காலாண்டில் வெங்காயம் ஏற்றுமதி 25 சதவீதம் குறைந்தது*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*பூனா*

*நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்–ஜூன்) நம் நாட்டிலிருந்து 4.48 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் 6.04 லட்சம் டன்னாக இருந்தது. ஆக, ஏற்றுமதி 25 சதவீதம் சரிவடைந்துள்ளது.*


*சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் வெங்காயம் உற்பத்தி அதிகரித்துள்ளது. எனவே அந்த நாடுகள் குறைந்த விலையில் ஏற்றுமதி செய்து வருகின்றன. இதனால் சர்வதேச சந்தையில் இந்தியாவின் வெங்காயத்திற்கு தேவைப்பாடு குறைந்துள்ளது. ஏற்றுமதி குறைந்துள்ளதற்கு இதுவே முக்கிய காரணமாகும்.*

*வளைகுடா நாடுகளில் ரம்ஜான் நோன்பு அனுசரிக்கப்பட்டு வருவதால் அங்கு வெங்காயத்திற்கான தேவை பெரிதும் குறைந்துள்ளது. இதுவும் நம் நாட்டின் ஏற்றுமதி குறைந்ததற்கு ஒரு காரணமாக உள்ளது. இந்த நிலை குறைந்தபட்சம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களில் வெங்காயம் பயிரிடும் பரப்பளவு சுமார் 20 சதவீதம் சரிவடைந்துள்ளது. அதே சமயம் மத்தியபிரதேசத்தில் பரப்பளவு*

அதிகரித்துள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தில், விரைவில் விளையக் கூடிய ஒரு வகை வெங்காயத்திற்கான சாகுபடி பரப்பு நன்கு அதிகரித்துள்ளது.

## தமிழக பட்ஜெட் சட்டசபையில் தாக்கல்: 12 ஆயிரம் கறவை மாடுகள் ; ஒரு லட்சம் குடும்பங்களுக்கு தலா 4 ஆடுகள் இந்த ஆண்டில் வழங்கப்படுகிறது





சென்னை, ஆக.5–

தமிழக பட்ஜெட் சட்டசபையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு 12 ஆயிரம் கறவை மாடுகளும், ஒரு லட்சம் குடும்பங்களுக்கு தலா 4 ஆடுகளும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டசபையில் நேற்று தாக்கலான பட்ஜெட்டில் கூறப்பட்டு இருப்பதாவது:–

அடையாள அட்டை

முந்தைய அரசால் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கையில் சிறிதளவு வருவாய் உபரி காட்டப்பட்டிருந்தாலும், புதிய திட்டங்களைத் தொடங்குவதற்கான எந்த நிதி ஆதாரத்திற்கும் அந்த அறிக்கையில் இடமில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மாறாக, மாநில அரசு ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும் கூடுதலான கடன் சுமையில் மூழ்கியுள்ளது. இதுமட்டுமின்றி, தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகம், போக்குவரத்துக் கழகங்கள் போன்றவற்றின் தொடர் வருவாய் இழப்பினால், அவை மிகப்பெரும் கடன் சுமையினால் முழுமையாக செயலிழக்கும் அபாய நிலையில் உள்ளன. எனவே, இந்தச் சூழ்நிலைகளையும், மாநில அரசின் வருவாயினையும் கருத்தில் கொண்டு மிகக் கவனமுடன் 2011–2012–ம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவு திட்ட மதிப்பீட்டை வகுத்துள்ளோம்.

மின் ஆளுகை முயற்சிகள் மூலம் பொது மக்களுக்கான சேவைகள் ஊழலுக்கு இடமளிக்காத வகையில் உரிய முறையில் செயல்படுத்தப்படும். பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு அங்க அடையாள

அடிப்படையில் அட்டையை வழங்கி அதன் அடிப்படையிலான 'ஆதார்' திட்டத்தை இந்த அரசு செயல்முறைப்படுத்தும்.

சோதனை அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மாவட்ட மின் ஆளுகை திட்டம் விரைவில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

சைபர் குற்றங்களை தடுக்க சேலத்திலும், திருநெல்வேலியிலும் சைபர் குற்றப்பிரிவுகள் தொடங்கப்படும். சைபர் தடயவியல் சோதனைக்கூடங்கள் சேலம், திருநெல்வேலி உள்ளிட்ட பிற ஆறு மாநகரங்களிலும் ஏற்படுத்தப்படும்.

கமிஷனரகம் இணைப்பு

தற்போது காலியாக உள்ள 896 சார் ஆய்வாளர்கள், 121 தொழில்நுட்ப சார் ஆய்வாளர்கள், 5,588 இரண்டாம் நிலை காவலர்களுக்கான பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். தற்போது, 11,622 ஆக இருந்து வரும் ஊர்க்காவல் படையினரின் எண்ணிக்கை 16,000 ஆக உயர்த்தப்படும். இப்படையினரின் தினப்படி 65 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தப்படும்.

2008–ம் ஆண்டு சென்னை புறநகர் காவல் ஆணையரகம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டது. இதனால் காவல் கண்காணிப்பு முறையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. 2005–ம் ஆண்டு ஒரே நிர்வாகத்தின்கீழ் உருவாக்கப்பட்ட சென்னை பெருநகர காவல் ஆணையரகமே குற்றத்தடுப்பிற்கு ஏதுவாகவும், சிறப்பாக செயல்பட உகந்ததாகவும் இருக்கும் எனக் கருதப்படுகிறது. எனவே, இந்த அரசு சென்னைப் புறநகர் காவல் ஆணையரகத்தை சென்னை மாநகரக்காவல் ஆணையரகத்துடன் ஒருங்கிணைத்து சென்னை பெருநகரக் காவல் ஆணையரகமாக உருவாக்கும். நிர்வாக வசதிக்காக இந்த ஆணையரகம் வடக்கு, தெற்கு, மேற்கு, மத்திய மண்டலம் என நான்கு மண்டலங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

மாற்றுமுறை தீர்வு மையம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கோடி ரூபாய் செலவிலும், சென்னை உயர்நீதிமன்றத்தில் ரூ.4.2 கோடி செலவிலும் தகராறுகளைத் தீர்க்க மாற்றுமுறை தீர்வு மையங்கள் கட்டப்படும். மேலும், நீதிபதிகள், வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு சமரசத் தீர்வு முறைகளில் பயிற்சி அளிக்கப்படும்.

சிறைச்சாலை நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கு, ஓர் ஆய்வாளர் பதவியும், 10 சார் ஆய்வாளர் பதவிகளும் உருவாக்கப்படும். மேலும், கூடுதலாக 9 உளவியல் நிபுணர்களும் ஒரு சட்ட ஆலோசகரும் நியமிக்கப்படுவார்கள்.

60 ஆயிரம் கறவை மாடுகள்

பால் உற்பத்தியில் 2–வது வெண்மை புரட்சியை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில், வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு, 60,000 கறவை மாடுகள் இலவசமாக வழங்கப்படும். 2011–2012–ம் ஆண்டில் பால் உற்பத்தி குறைவாக உள்ள பின்தங்கிய கிராமப்புறங்களில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு ஜெர்சி போன்ற 12,000 கலப்பின கறவை மாடுகள் வழங்கப்படும். இதற்காக ரூ.56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில் பயனடைந்த குடும்பங்களைச் சேர்ந்த மகளிரைக் கொண்டு 4,000 பால் உற்பத்தி குழுக்கள் உருவாக்கப்படும். மூன்று முதல் ஐந்து கறவை மாடுகள் கொண்ட சிறு பால் பண்ணைகள் ஏற்படுத்த ஊக்குவிக்கப்படும்.

கூடுதலாக 155 நடமாடும் கால்நடை மருத்துவ மையங்கள் ஆவின் நிறுவனத்தால் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 10 கிலோமீட்டர் சுற்றளவில் ஒரு நடமாடும் கால்நடை மருத்துவ மையம் செயல்படுவது உறுதி செய்யப்படும். ஆவின் நிறுவனம், மேலும் 100 கூடுதல் பால் கொள்முதல் மையங்களை ரூ.32.50 கோடி செலவில் நிறுவும். 5,000 லிட்டருக்கு கூடுதலாக கொள்ளளவுத்திறன் கொண்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் குளிரூட்டும் வசதி, மதிப்பு கூட்டு வசதிகளுடன் நவீனப்படுத்தப்படும். நடப்பு ஆண்டில் ஆவின் நிறுவனம் மூலம், மேலும் 10 பால் பண்ணைகள் இந்த முறையில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கால்நடை பராமரிப்புத்துறையில் உதவி இயக்குநர்களின் எண்ணிக்கை 65 லிருந்து 76 ஆக உயர்த்தப்படும். 385 கால்நடை துணை மையங்கள், கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும். திருநெல்வேலியில் ஒரு கால்நடை மருத்துவக்கல்லூரி விரைவில் செயல்பட தொடங்கும். இதுபோலவே, தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டிலும் ஒரு கால்நடை மருத்துவக்கல்லூரி நடப்பாண்டில் தொடங்கப்படும். மேலும், உலகத்தரம் வாய்ந்த கோழி வளர்ப்பு மற்றும் மேலாண்மை மையம் ஒன்று ஓசூரில் ஏற்படுத்தப்படும்.

தலா 4 ஆடுகள்

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு, குறிப்பாக விவசாய கூலித்தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நான்கு வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகளை இலவசமாக வழங்கும். 2011–2012ம் ஆண்டு, ஒரு லட்சம் குடும்பங்கள் தலா ரூ.12,000 மதிப்புள்ள ஆடுகளை இத்திட்டத்தின் கீழ் பெற்று பயனடைவர். ரூ.135 கோடி இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. பின்னர் ஒவ்வோர் ஆண்டும் 1.5 லட்சம் குடும்பங்களுக்கு ஆடுகள் வழங்கப்படும். ஐந்து ஆண்டுகளின் முடிவில் 7 லட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைவார்கள். இது ஊரகப்பகுதிகளில் உள்ள

குடும்பங்களில் சுமார் 10 விழுக்காடாகும்.

அண்ணாவின் பிறந்தநாளான செப்டம்பர் 15–ம் நாள் ஏழைக்குடும்பங்களுக்கு இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்துடன் இந்த திட்டமும் தொடங்கி வைக்கப்படும். ஏழை எளிய மக்கள் ரூ.12,000 மதிப்புள்ள சொத்தினை பெற்று பொருளாதார நிலையில் உயருவதுடன் தொடர்ந்து வருவாய் பெறும் வாய்ப்பினையும் ஏற்படுத்தும் ஒரு முக்கியத் திட்டமாக இதை அரசு கருதுகிறது.

நடப்பு ஆண்டில் 24,000 ஏக்கரில் குறிப்பிட்ட பசுந்தீவன வளர்ப்பிற்கு மானியம் வழங்கப்படும். 50 விழுக்காடு மானியத்தில் 5,000 புல்வெட்டிகளும், 5,000 நறுக்கும் இயந்திரங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்படும். பசுந்தீவன உற்பத்தி திட்ட மானியத்திற்கென, ரூ.20 கோடியை இந்த ஆண்டு அரசு ஒதுக்கியுள்ளது.

இவ்வாறு பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது.

## உரிய காலத்தில் கடனை திரும்ப செலுத்தும் விவசாயிகளுக்கு, ரூ.3 ஆயிரம் கோடி வட்டியில்லா பயிர்க்கடன் பட்ஜெட்டில் அறிவிப்பு



சென்னை, ஆக.5–

உரிய காலத்தில் கடனை திரும்ப செலுத்தும் விவசாயிகளுக்கு ரூ.3 ஆயிரம் கோடி வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக தமிழக பட்ஜெட்டில் கூறப்பட்டு இருப்பதாவது:–

நகரமயமாக்கலின் விளைவாக விவசாய சாகுபடி நிலங்கள் குறைந்து வருகின்றன. மோசமான இச்சூழ்நிலையை மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் இவ்வரசு மேற்கொள்ளும். கடந்த ஆண்டு 85.35 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி அடைந்துள்ள நிலையில் 2011–2012–ம் ஆண்டில் 115 லட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் இலக்கினை இந்த அரசு நிர்ணயித்துள்ளது.

நெல் உற்பத்தியை அதிகரிக்க

நெல் உற்பத்தித் திறனை உயர்த்த 22.24 லட்சம் ஏக்கரில் திருத்திய நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும். இதேபோன்று 14,000 ஏக்கரில் நவீன முறையில் கரும்பு உற்பத்தித்திறன் உயர்த்தும் திட்டம் மேற்கொள்ளப்படும். கரும்பு உற்பத்தி திறனை உயர்த்துவதற்காக, அடுத்த 2 அல்லது 3 ஆண்டுகளில் 2.45 லட்சம் ஏக்கரில் இத்திட்டத்தை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. பழங்கள் மற்றும் காய்கறிகளின் உற்பத்தி திறனை உயர்த்திடும் வகையில் ரூ.20.93 கோடி ஒதுக்கீட்டில் 22,000 ஏக்கர் பரப்பில் துல்லிய பண்ணையமும், 4 லட்சம் சதுர மீட்டர் பரப்பில் பசுமைக் குடில் முறையும் மேற்கொள்ளப் படும்.

விதை மானியத்திற்காக மட்டும் ரூ.85.92 கோடி இந்த அரசு ஒதுக்கியுள்ளது.

கூட்டுறவுத்துறை வாயிலாக, 2011–2012–ம் ஆண்டில், உரிய காலத்தில் கடனை திரும்ப செலுத்துவோருக்கு வட்டியில்லா பயிர்க்கடனாக ரூ.3,000 கோடியினை வழங்கும் உயர் இலக்கினை இவ்வரசு நிர்ணயித்துள்ளது.

சிறு, குறு விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனம் அமைத்திட 100 விழுக்காடு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் வழங்கப்படும். நுண்ணீர் பாசன இயக்கத்தின் கீழ் 87,500 ஏக்கர் பரப்பும், தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் 37,500 ஏக்கர் பரப்பும், ஆக மொத்தம் 1,25,000 ஏக்கர் பரப்பு நுண்ணீர் பாசன முறையின் கீழ் கொண்டுவரப்படும். இதற்காக மாநில நிதியிலிருந்து ரூ.151 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இயந்திரமயமாக்கல்

வேளாண்மையில் இயந்திரமயமாக்கலின் முதல் நிலையாக வேளாண் பொறியியல் துறையின் கீழ் செயல்படும் 74 வேளாண் உப கோட்டங்களுக்கு அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்கள் வாங்கப்படும். 2ம் நிலையாக, நடுத்தர வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படும். இந்த இயந்திரங்கள் வாங்குவதற்காக ஒவ்வொரு சங்கத்திற்கும் 50 விழுக்காடு அளவிற்கு, அதிகபட்சமாக

*ரூ.20 லட்சம் வரை மானியம் வழங்கப்படும். நடப்பு ஆண்டில் குறைந்தபட்சம் 400 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் இந்த வசதியை பெறும். ரூ.100 கோடி இத்திட்டத்திற்கென வழங்கப்படும். 3ம் நிலையாக, விவசாயிகள், விவசாயக் குழுக்கள், சுயஉதவிக்குழுக்கள் ஆகியவற்றுக்கு இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கு தேவையான மானிய உதவி வழங்கப்படும். இப்பணிகளுக்காக தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.72.30 கோடி ஒதுக்கப்படும். தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் தீவிரமாக செயல்படுத்தப்படும். இவ்வாறு பட்ஜெட்டில் கூறப்பட்டு உள்ளது.*

தினகரன்

## வால்பாறை தேயிலைக்கு மவுசு

பதிவு செய்த நாள் : 8/5/2011 0:27:47



வால்பாறை : கொல்கத்தா, கவுகாத்தி, சிலிகுரி, கொச்சி, குன்னூர், கோவை ஆகிய 6 இடங்களில் தேயிலைத்தூள் ஏல மையங்கள் உள்ளன. இதில் வாரந்தோறும் ஏலம் நடக்கிறது. கொச்சியில் நேற்று முன்தினம் ஏலம் நடந்தது. இதில் வடமாநிலத்தில் இருந்து வந்த தேயிலைத் தூள் கிலோ ரூ.60 முதல் ரூ.70 வரையும், நீலகிரி கூடலூர் தேயிலைத் தூள் ரூ.70 முதல் ஸி80 வரையும், கோவை மாவட்டம் வால்பாறை தேயிலைத்தூள் ரூ.75 முதல் ரூ.90 வரையும் விற்றது.

வால்பாறை தனியார் மற்றும் அரசு தேயிலைத் தோட்ட நிர்வாகிகள் கூறுகையில், உயரமான மலைப்பகுதியான வால்பாறையில் விளையும் தேயிலைத்தூளில் தயாராகும் டஸ்ட் ரகம் மற்ற பகுதி தேயிலைத்தூளை காட்டிலும் தரமும், குணமும், மணமும் கொண்டதாக உள்ளது. இதனால் வால்பாறை தேயிலைத் தூள் அதிகபட்சமாக ரூ.90 வரை விற்பனையானது என்றனர்.

# வெங்காயம், பழங்கள், பால் விலை உயர்வால் அதிகரித்தது உணவு பணவீக்கம்

பதிவு செய்த நாள் : 8/5/2011 0:26:9



புதுடெல்லி : வெங்காயம், பழங்கள் மற்றும் பால் விலை உயர்வு காரணமாக ஜுலை 23ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 8.04 சதவீதமாக உயர்ந்தது. முந்தைய வாரத்தில் இருந்த 7.33 சதவீதத்தைவிட இது 0.71 சதவீதம் அதிகம். காய்கறிகள் உட்பட பல்வேறு உணவு பண்டங்களின் விலை உயர்வால் 2009ம் ஆண்டு நவம்பருக்குப்பின் உணவு பணவீக்கம் அதிகமாகவே இருந்தது. குறிப்பிட்ட சில பொருட்களின் விலை குறைவால் 20 மாதங்களுக்குப்பின் ஜுலை மத்தியில் உணவு பணவீக்கம் 7.33 சதவீதமாக குறைந்தது. மேலும் கடந்த 2010ம் ஆண்டின் இதே காலத்தில் இது 16.97 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த விலை குறியீட்டெண்படி ஜுலை 23ம் தேதி வாரத்தில் வெங்காயம் விலை 23.36 சதவீதமாகவும், பழங்கள் 16 சதவீதம், பால் 10.26 சதவீதம், காய்கறிகள் 10.20 சதவீதம், தானியங்கள் 5.13 சதவீதம், உருளை 7.85 சதவீதம், முட்டை, கறி மற்றும் மீன் விலை 6.66 சதவீதமாகவும் உயர்ந்தன. இதனால் உணவு பணவீக்கம் 0.71 சதவீதம் அதிகரித்தது.

இதற்கிடையில் உணவு அல்லாத பொருட்களின் விலை 16.05 சதவீதத்திலிருந்து, 15.60 சதவீதமாக குறைந்தது. உணவு பொருட்களின் விலை சராசரி அளவில் இருந்ததால் உணவு பணவீக்கம் அண்மைக்காலமாக குறைந்திருந்தது. ஆனால், எதிர் வரும் காலங்களில் விலை உயரும் என்பதால் மீண்டும் உணவு பணவீக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.